தினுடைய கலர்கள் எல்லாம் சரியாகத் தெரியாது என்று குறிப்பிட்டதன் விளைவாக, விளக்கு வெளிச்சத்திலே தெரிய முடியாது என்றும், இரவில் செய்யக்கூடாது என்றும் நீதிமன்றத்திலே இருந்து பழைய தீர்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே அதை செய்ய முடியாது என்ற சந்தர்ப்பங்களையும் எடுத்துச் சொன்னார்கள்.

10-25 மணி

இருந்தாலும் இரவு நேரத்திலும் அதுகுறித்து செய்ய முடியுமா என்பதை மேலும் அவர்களை விசாரிக்குமாறு, ஆராயுமாறு சொல்லியிருக்கிறேன். அதுகுறித்து மருத்துவர்களின் அறிக்கை வந்த பிறகு காலத்தைக் கூட்டுவது பற்றிய முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. கோவிந்தராஜன்.

திரு. சி. கோவிந்தராஜன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

திரு. உ. ரா. வரதராசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. சி. கோவிந்தராஜன். முடிக்கட்டும்.

5. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 38-வது ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை அறிக்கையை தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) வினா நேரம் முடிவுற்ற பின் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குறித்த நடைமுறைகள்—தொடர்ச்சி.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு ஒரு முறைகேடு என்ற முறையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த 14 மாத காலமாக இந்த அவையிலே கேள்வி நேரம் முடிந்த பிறகு,